<u>ஆத்மார்த்தமாய்</u>


-- ஜெயசேகரன் ஜென்




1. பெருமழை
மென் கானம்
நனையும் ஆண்மை
எழுதும் ஆன்மா
தூர தெரியும் நீ - உன்
இருப்பை உணரும் நான்.

#என்னதவம்செய்தனை

2. ஒவ்வொரு
அங்குலமும்
மழையால்
அணைக்கப்பட்ட
இலை ...
வெட்கத்தில்
மௌனத்தில்
காதலில்
வெட்கம் மிளிர
சிலிர்த்ததில்
நழுவிச்
நகக்காம்பு கடித்து
விடை பெருகின்றனவோ
துளிகள் ?




3. எனக்குள்
எரிந்த
எறும்பு தீ
எந்த காயமும்
ஏற்படுத்தாது
எத் தடையமுமின்றி
எப்போதோ மறைந்து போனது.

#என்மனம்பனிக்காடு

4. மேகமும் பூமியும்
இணையும்
மழைப் பாலம்...
அதில்
உள்ளும் புறமும்
குளிர நடக்கும்
நான்.
எங்கிருக்கிறாய் நீ ?


#மழையில்நனைவீர்

5. வாகனத்திற்குள்
நனையாமல் இருக்கும் நான் ...
நனையும் தெரு ...தூங்காத விழிகள் பாடல் ...
யாருமற்ற ஒற்றை அசைவு...
தூரத்து குடைப் பெண் ... அருகாமை சுடு மூச்சு ...
போதாது இது என்பதால்
கதவை திறந்து வெளிவருகிறேன்
முழுவதுமாய் நனைய !

6. ஒரு புள்ளியில்
ஒருமிக்கும் நாம்
நீள்கொடுகளாக
நெடுந்தூரம்
பயணப்படுவதை
தொடற்புள்ளிகள்
உலகிற்கு சொல்லும்.

7. எவ்வித செயற்கையுமின்றி
என் முகம் வாழ
என் புகைப்படங்கள்
எனக்கு இடம் கொடுக்கின்றன.

#புகைப்படசுதந்திரம்




8. இரண்டு புற்களுக்கு
இடையினில்
இதமாய் தவழ்ந்த
தென்றல் காற்றை
உணரும் நான்...
ஒரு புறமாய் படுத்திருக்கும்
என்னை உள்வாங்கும்
புல்வெளி.

#உற்றுநோக்கின்





**9. மொத்த வீதியும்**
**யாருமற்று...**
**வாகனத்தின் விளக்கால்**
**வாழ்க்கை கொடுக்க**
**வரும் நான் ...**
**என்னை சந்தேகமாய்**
**நுகர்ந்து கடக்கும்**
**நாய்களின் உலகம்**

**#ஊரப்படித்தான்பேசும்**

**10. ஏழு எறும்புகள்**
**ஒன்றன் பின் ஒன்றாக**
**நகர்கின்றன ...**
**காத்திருத்தல்**
**மென் உணர்வுகளுக்கு**
**போதி மரம் !**

**11. எனக்கான பயணங்கள்**
**என்னால் தாமதமாக**
**எச்சிலுடன் உணரப்படுகின்றன -**
**ஏற்கெனவே இயற்கையால்**
**எழுதப்பட்டிருப்பதால்.**

12. பூமியில் இருந்து
கிளம்பும் விண்கலம்





தன்னிலுருந்து ஒவ்வொன்றாய்
கழற்றி எரிந்து எறிந்து
விண் அடைவதுபோல்
என் பயணங்களை
ஆன்மா உண்கிறது

13. துணையற்ற தனிமை என
ஊர் பார்க்கும் பேசும்
துணையாய் நீ இருக்க
நான் உணருந் தனிமை
கேள்விகள் அற்ற பதில்கள்
நெருப்புகள் அற்ற யாகம்

14. இயற்கையை
இணைத்துக்கொண்டதால்
இருபுறமும் மகிழும்
இந்த கால பயணி நான்.

15. நான் ஒரே மாதிரியாகத்தான்
இருக்கிறேன் ..
நீதான் உன் பார்வைகளை
மாற்றிக்கொண்டே
இருக்கிறாய்.




16. ஒரு காலணியின்
தவறுக்கு
இறப்பு வரை
தனித்து வாழும்
இன்னோரு காலணி ...

#வித்தியாசமானவாழ்க்கை

17. மன்னன் வரும்போது
சாமரங்கள் வீசப்படும் ...
மன்னன் வருவதாக
அறிவிக்கப்படும்போது அல்ல !

18. அநீதியின் பின்புறம்
போராட்டம் தயாராவது
நீதிக்கு தெரியும்.


19. மழை நின்ற பின்
விழும் துளிகள்
பிரிவிற்கு பின் வரும்
நினைவுப் புள்ளிகள்.

20. இருளும் மௌனமும்
இணை பிரியா
இணைவோ .. ?
இதய துடிப்பு
இத்தனை துல்லியமாய்
இடப்பக்க காதில் ... ! #இருளழகுகவனி

21\. சாளரம் வழி தெரியும்
உலகம் உண்மை ...
நினைக்கும் மனிதம் !

22\. ஏதோ ஓர் முகமறியா
யதார்த்த நட்பு
ஆன்ம ஸ்பரிசத்தை
அள்ளி வழங்க

எந்திர கதி விலகி
எனக்குள்ளே எழும்புகிறேன்
நீர் பனிக்கும் என் கண்கள்
நின்னை தேக்கி வைக்கும்
நினைவிருக்கும் வரை !





23\. தனிமைக் கதவின்
தாழ்ப்பாள்
தானாக திறக்கிறது

தடங்கல் இன்றி
தன்னை தடம் பதிக்கிறது
தான் இழக்கும் ஆவி

24. மழைப் பூக்களில்
நான் நனைவதால்
உள்ளிருந்து மலர்வதும்
மலர் வாசம் நுகர்வதும்
என் இயல்பு


25. நடக்கும் நாடகம் முடியவில்லை
நகரும் நானும் விலகவில்லை
ஆதலால் ...
எல்லோரின் நடிப்பையும்
எடை போட முடிகிறது ...
சிலரின் நடிப்பற்ற அன்பையும் !




26. மிதக்கும் அந்த கப்பல் முழுக்க
நான் நிறைந்திருக்கிறேன்
ஆதலால் ...

கப்பலின் 'நீருக்குள் நகர்வையும்'
அங்குலம் அங்குலமாக
நான் உணர்கிறேன் ..

மற்றவர்கள் பயணிக்க மட்டுமே
உணர்தல் அவர்களிடம்
உளமாற நடக்க வாய்ப்பில்லை !




27. மாலை வெயிலில்
மதி மயக்க
தெரியும் செவ்வானத்தில்
தெரியா நட்சத்திரங்களை
நான் தேடுவதில்லை ...


நட்சத்திரத்திமாய்
நீ இருந்தாலும்
காத்திருக்கிறேன்
கடும் இரவுக்கு

கனியும் நட்சத்திரங்கள்
தானாக கண்களுக்கு
தணியாத காட்சி அளிக்கும்
சுப முகூர்த்தம் நடந்தே தீரும் !

#காத்திருத்தல்பழகு

28. என் தோள் சேரும்
மாலைக்கான பூக்கள்
இனிதான் பூக்கும் ..
நார் அநேகமாய்
பூக்களை கண்டுபிடிக்கும்
பயணத்தை தொடங்கி இருக்கும் ..
யாரோ ஒரு மனிதம்
பூவையும் நாரையும்
இணைக்க கற்றுக்கொண்டிருக்கும்..

நான் செய்ய வேண்டியதெல்லாம்
என் பணி செய்து கிடப்பதே !





29. ஐம்புல வலைகளில்
சிக்கிக் கொள்ளா
இவ்வாழ்வின்
செம்மீனா நீ ?

இன்னும் கொஞ்சம்
நீந்தி வா ..
உன் கண்ணுக்கு
நான் தெரியக்கூடும் ..

உடல் தவிர்த்து
உளம் சேர்த்து
அடுத்த ஜென்மக்
கடலை நோக்கி
நீந்தி நகர்வோம் !

30. குடத்தில் இருக்கும்
நீரில் தெரியும்
நிலா பிம்ப வாழ்க்கை
நீர் அதிர்வு வரும்வரை
மட்டுமே என
நிலாவுக்கு தெரிவதால்
அதன் உயரத்தில்
அழகாய் காய்வதில்
கண்ணும் கருத்துமாக ...
பிம்பத்தை பற்றி
கவலைப்படும் மானிடா ...
உன் நிலை என்னவாகும் என யோசிடா !





31. அந்த தேக்கு மரக்காடு
வீசிய காற்று சாமரத்தில்
என் தனிமை
இலையுதிர்ந்தது...
தரை முழுக்க
என் கடந்த கால
நினைவு தடயங்கள்.

32. எழ முடியாமல்தூங்கிய
தாயின் கதகதப்பு காலங்களை
மாற்ற இனி ஒரு தவம்
என்கிற
வாய்ப்பே இல்லை ..

33. என்
வாள் வீச்சு வார்த்தைகள்
வெட்டிய ஆணவங்கள்
இன்னும் குத்துயிருடன்
வெட்டவெளியில் திரிகின்றன ..

இன்னும் நன்கு
வெட்டியிருக்க வேண்டும்
என அறிவுரை சொல்லும்
எம் மனம்.




34. தூரப் பார்த்து
எழுதுவதற்கு பதில்
பக்கத்திலேயே வந்துவிடு
என உரிமையாய்
அழைக்கும் நிலவு ...


அழைப்பை ஏற்றுக்கொள்ள
ஆழ்மனம் யோசிக்கிறது
தூரம் அழகு என்றும்
என சமாதானம் பேசுகிறது.

35. ஏதோ ஒரு பறவை
எங்கோ ஒரு குளத்தில்
மூழ்கி எழுந்த பின்
ஏன் எனக்குள்
இத்தனை கேள்விகள் !

மீன் தப்பித்திருக்குமா ?
மீன் நழுவி இருக்குமா ?
மீன் ஆழம் சென்றிருக்குமா ?
மீன் போராடி வெற்றி பெற்றிருக்குமா?

மனித முகங்களுக்கும்
இதே கேள்விகள்
பதில்கள்
உங்களின் மனசாட்சியுடன்.


36. கொடுத்த உணவை
வாங்கிக்கொண்ட பின்
சிரித்த அந்த
பிச்சைகாரனின்
அழுக்கு முகம்
இன்றைய நாளின் முடிவில்
தூக்க ஆரம்பத்தில்
ஏன் வருகிறது ?
#உயிர்இருக்கும்வரைஉதவிடு




37. என் தோட்டத்தில்
முட்கள் இல்லை
என்று யார் சொன்னது ?
காலணி அணிந்து வா ...
என் வீட்டில்
கதவுகள் இல்லை
என்று யார் சொன்னது ?
கதவை திறந்து வா ...

38. கொடுக்காமலும்
எடுக்காமலும்
புரிதலில் பகிர்ந்த
நட்பு கிடைத்தால்
நல் வரம்
வைத்திருந்தால்
கிடைத்திருந்தால்
பெற்றிருந்தால்
பெரும் வரம்

கிடைத்த மகிழ்வில்
கொடுத்த மகிழ்வில்
தோள் சாய்ந்த சுவரின்
மென் சூடு
மெது மனதின் ஒத்தடமாய்.





#நட்புநிலைஉயர்த்து

39. மழை பெய்து
நிற்கிறது ...

இலையின் நீர்த்துளி
இன்னும் நிற்கவில்லை ...

தவம் செய்த மண்
மீண்டும் மீண்டும்
நனைகிறது !




40. நீரின்
வெம்மையில்
கழுவப்படும் உடல்
நாள் ஒன்றுக்கு
தயாராகிறது ...
நாளும் உடலும்
புதியதாய் !

41. உள்நாக்கு தொடும்
சர்க்கரை அற்ற தேநீர்
உற்சாகத்தால்
தானாக இனிக்கிறது ...

உளம் ஆறும்
உணர் நிலையில்
உவகையுடன் வரவேற்கும்
இன்னுமோர் இனிய நாள் இங்கு.. !

42. உன் நினைவுகள்
உடன் பயணிக்க
சிரித்தவண்ணம்
நகரும் நான்
தனியாக செல்வதாய்
பேசும் உலகம் பார்க்கையில் ...

43 சூரிய சந்திர
மறைவுகளில்
வெளிச்சம் அற்ற
வெண் மேக வானம்
தனக்கு கீழ்
நகரும் என்னை
எந்த வித்தியாசமும்
இன்றி வரவேற்பதை
நான் இன்னும்
கற்க வேண்டி இருக்கிறது !






44. வெளிச்சம் இழந்து
ஆரம்பமாகும்
இரவுத் தூக்கம்
எங்கோ செல்லும்
வாகனத்தின் தொலைதூர
ஒலி இடைஞ்சல்
தழுவும் வண்ணமற்ற
போர்வையின்
ஆதரவு தழுவல்
தலையை உள்வாங்கி
காதுகளை அரவணைக்கும்
பஞ்சு தலையணை
கைபேசியின் செவ்வக
ஒளியில் தெரியும்
சிறு வெளிச்ச உலகம்
தூக்கம் மறந்த
என்னை வார்த்தைகளால்
எழுத முயலும் கவிதை இது என்பேன்.

45. திடீரென்று இருண்ட
என் அறைக்குள்
நான் மட்டுமே
வாழ ஆரம்பிப்பதை
நீண்ட நிம்மதியான
தூக்கத்தின் மூலம்
உனக்கு சொல்கிறேன்.

46. அறை
இருளை
இழுத்துவந்து
என்னை தாலாட்டுகிறது
வண்ணமற்ற உலக
தொட்டிலில்
குழந்தையாய் நான்
தூங்கிப்போகிறேன்.

47. வெளிச்சம் பழகிய
கண்கள்
இருள் பழகி
கண் அயரும்போது
எழுப்பிவிடும்
சூரிய வரவின்
வெப்ப அறிவிப்பு !







48. எங்கோ தெரியும் வானவில்
அருகில் வராமல் இருப்பதில்
இருக்கும் சுவாரஸ்யம் போல்
உன் இருப்பும் உணர்வும்...
வானவில்லும் மழையும்
நிறம் மாறும் மேகமும்
மறையும் உதிக்கும் சூரியனும்
நாம் பேசும் மொழிகள்
மற்றவர்களின் கண்களுக்கு
நீ இயற்கை
நான் யாரோ !

49. நினைத்ததை பேசி
நினைத்தபடி வாழ்ந்து
நினைத்ததை சாதித்து
நினைத்தவருடன் வாழ்ந்து
நினைத்த நேரத்தில் பயணித்து
நினைத்ததை உண்டு
நினைப்பதை எழுதி படித்து
நினைத்தபடி எழுந்து உறங்கி ..
ஆம்...
எல்லாம் கிடைக்கட்டும்

அவளுக்கும் !


#உலகபெண்கள்தினம்



50.மறைந்த சுகப்பொழுதுகள்
மனதிற்குள்
மீண்டும் வர முனைவது
ஈர இதயம் இன்னும்
ஈரத்தோடு இருப்பதால் !

51. தூறல் ஏற்படுத்தும்
திடீர் அதிர்வுகள்
எப்போதும் வலிப்பதில்லை ..
மகளின் செல்ல அடியைப்போல் !

52. மெதுவாக என் மீது
விழுந்த கருப்பு போர்வை ...
சத்தமின்றி யுத்தமின்றி
ஒரு மௌன ஒப்புதல் ..
என்னை இழக்கும்
கண் மூடிய தருணத்தில்
கலக்கும் நானும்
எனக்குள் வாழும் நானும் ..
உலகம் நான்
தூங்கி விட்டேன் என்று
சொல்வது உண்மையோ ?





53. பட்டுத் தெறிக்கும்
அந்த ஒற்றைத் துளி
எம் இயற்க்கை
தீபாவளியின்
மழை மத்தாப்பு !


54. பக்கத்து வீட்டு
குட்டிப் பெண்
பார்த்த ஆசைப்
பார்வையில்
மொத்த பட்டாசும்
இடம் மாறியது ...
அவர்கள் வீட்டின்
தீபாவளியில்
நான் மகிழ்கிறேன் !

55. நிலாவை
கேட்டேன்
மேகம் வந்தது ...
நட்சத்திரங்களை
கேட்டேன்
மழை வந்தது ...
இருளை கேட்டேன்
இடி இடித்தது ..
இப்போது புரிகிறது
இயற்கை இன்னொரு
மொழிப் பேச்சை
எந்நேரத்திலும்
எப்படியும் ஆரம்பிக்கும் !

56. உன் வீடு
குழந்தைகள்
தீபாவளி என்று
மனம் நின்றுவிடப்போகிறது ...
கொஞ்சம் கவனி ...
ஏதோ ஒரு குழந்தை
கானல் பட்டாசை
கொளுத்திக்கொண்டிருக்கும் ...
அங்கு செல் ...
மனிதம் எடு...
கொண்டாடு !
அங்கே நான்
உனக்கு தெரிய வாய்ப்புண்டு.




57. திடீரென்று
நான்கு நாட்கள்
பார்க்கவில்லை எனில்
பரபரக்கிறது யோசனைகள் ..
ஒன்றும் ஆகவில்லையே
என் தினம்தோறும் நிலவிற்க்கு !




58. உன் முகமூடிகள்
உன்னை நோக்கி
வந்தவை அல்ல..
நீ தேர்ந்தெடுத்தவை ...
தேர்ந்தெடுத்தவற்றில்
தேவையற்றவை
எறியப்படும்போது
மீதமுள்ளதே
தேவையான நீ !
அந்த நீ உடன்
பேச தயாராகும் நான் !!

59. கனம் நமக்கு தாங்காது
என்பதால் நாம்
போர்வைக்கு வெளியே ..
என் அருகாமை
சூடு போதும் உனக்கு
குளிராதிருக்க !
- இப்படிக்கு மெத்தை !

60 .நானும் நீயும்
வெறும் ஈரம் அல்ல
சட்டென காய்ந்து
சரேலென மறைய.

தொகுப்பு: அனுத்தமா